அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம். மீகா 7:11

# கிருபையின் மன்னா!

மன்னா – 2 | ஏப்ரல் – 2018 | மலர்–16

## சபைக்குத் தேவன் தரும் மன்னா

### ஓட்டம்

வேதாகமத்தில் எழுத்தின்படியே ஓடின சிலரைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. அவர்கள் ஒவ்வொருவரும் உலகப் பிரகாரமாக வெவ்வேறு காரணங்களுக்காக ஓடினார்கள் எனக் காண்கிறோம். அவர்கள் எந்தச் சந்தர்ப்பங்களில் ஓடினார்கள் என்பதைத் தியானிப்போம்.

**1. யோவான் 20:2-4**

இந்த வேத பகுதியில் ஓடினதாகக் கூறப்பட்டுள்ள நபர் யாரென்றால், அது ஒரு பெண்மணி. அவள் பெயர் மகதலேனா மரியாள். இயேசு மரித்து அடக்கம் பண்ணப்பட்டதைக் கண்ட அவள், அவரை மிகவும் அதிகமாக நேசித்ததினால் இயேசுவின் கல்லறைக்கு அதிக இருட்டோடே வந்தாள். ஆனால், கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்டிருப்பதைக் கண்டு, உடனே **ஓடி,** பேதுருவிடத்திலும் யோவானிடத்திலும், “கர்த்தருடைய சரீரத்தை யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்” என்று கூறினாள். பேதுருவும் யோவானும் கல்லறையினிடத்திற்கு ஒருமித்து ஓடினார்கள் (வச. 3). பேதுருவைப் பார்க்கிலும் யோவான் துரிதமாக **ஓடி,** முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்து, அதற்குள்ளே குனிந்து பார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளேபோய், இயேசுவின் தலையில் சுற்றியிருந்த சீலை தனியே ஒரு இடத்தில் சுருட்டி வைத்திருக்கிறதைக் கண்டான். யோவானும் கல்லறைக்குள் போய், கண்டு விசுவாசித்தான். இயேசு மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்னும் வேதவாக்கியத்தை அவர்கள் அறியாதிருந்தனர். சீஷர்கள் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போன

பின்னரும், மரியாள் கல்லறையினருகே நின்று அழுதுகொண்டிருந்தாள். அவள் இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அறியாதிருந்தாள்.

பேதுருவும் யோவானும் இயேசுவின் சீஷராயிருந்து, அவருடைய உபதேசத்தைக் கேட்டவர்கள். அவர் தாம் மரிக்கப் போவதைக் குறித்தும், மூன்றாம் நாள் உயிரோடெழுந்திருக்கப் போவதைக் குறித்தும், சீஷர்களெல்லாரிடமும் கூறியிருந்தார். ஆயினும், கல்லறை வெறுமையாயிருக்கக் கண்ட அவ்விரு சீஷர்களும் அவர் உயிர்த்தெழுந்துவிட்டதை அறியாமலும் உணராமலும் இருந்தனர். இருட்டோடே கல்லறைக்கு வந்த மரியாள், கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தபோது, இயேசு அவளிடம், “ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்” என்றார். அப்பொழுதும் மரியாள் அவரை அறியவில்லை. இயேசு அவளைப் பார்த்து, “மரியாளே” என்றவுடன் அவள் அவரை இயேசு என்று அறிந்துகொண்டாள். இருட்டோடே இயேசுவின் கல்லறைக்கு வந்த மரியாள், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை முதலாகக் காணும் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொண்டாள்.

பிரியமானவர்களே, நீங்கள் எந்த அளவு வாஞ்சையுடன் இயேசுவை அதிகாலையில் தேடுகிறீர்கள்? அதிகாலையில் அவரைத் தேடுங்கள்; அவர் உங்களுக்குத் தென்படுவார். அவரோடு நீங்கள் பேசினால், அவர் உங்களோடு பேசுவார். இந்தச் சிலாக்கியத்தைப் பெற்றுக் கொள்வீர்களாக.

**2. மத்தேயு 28:1**

இங்கு மகதலேனா மரியாளுடன் இன்னொரு மரியாளும் கல்லறையைப் பார்க்கச் சென்றார்கள் என்று காண்கிறோம். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன், பூமி மிகவும் அதிரும்படி இறங்கிவந்து, கல்லறையின் வாசலிலிருந்த கல்லைப்புரட்டித் தள்ளி, அதன்மேல் உட்கார்ந்தான். அவன் அந்த இரண்டு பெண்களைப் பார்த்து, இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை அவர்களுக்குச் சொன்னதுமன்றி, அவர் உயிர்த்தெழுந்துவிட்டார் என்பதை அவருடைய சீஷர்களுக்குக் கூறும்படியும், அவரைக் கலிலேயாவில் காணலாமென்றும் அவர்களுக்கு அறிவித்தான். அவர்களிருவரும் பயத்தோடும் சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுப் புறப்பட்டு, அவருடைய சீடர்களுக்கு அறிவிக்க **ஓடினார்கள்** (வச. 8).

இந்த ஓட்டம், உயிர்த்தெழுதலின் நற்செய்தியை அறிவிக்கும்படியாய் ஓடின ஒன்று. நாமும் பாவத்தில் வாழும் மக்களுக்கு, இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்த நற்செய்தியை அறிவிக்க ஓடுவோம். மனுமக்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படியாக, சுவிசேஷத்தை அறிவிக்க எல்லா இடங்களுக்கும் ஓடுவோமாக.

**3. அப்போஸ்தலர் 8:29,30**

பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சிபெற்ற ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பு என்பவன், சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்தில் இயேசு கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினான். அநேகரிலுள்ள அசுத்த ஆவிகள் அவர்களை விட்டுப் புறப்பட்டுப் போயின. திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணம் பெற்றனர். சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டனர்.

கர்த்தருடைய தூதன் பிலிப்பைப் பார்த்து, எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்குப் போகும் வனாந்தர மார்க்கமாய்ப் போகும்படி கட்டளையிட்டான். பிலிப்பு உடனே எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய இராஜஸ்திரீயாகிய கந்தாகேயின் மந்திரியும் பொக்கிஷத்திற்குத் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியன் ஒருவன், எருசலேமில் பணிந்துவிட்டு ஊருக்குத் திரும்பும் வேளையில், தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர் அந்த மந்திரியின் இரதத்துடனே சேர்ந்துகொள்ளச் சொன்னபோது, பிலிப்பு **ஓடிப்போய்ச்** சேர்ந்து கொண்டான் (வச. 30). அந்த மந்திரியிடம் அவன் வாசிக்கிற பகுதியின் கருத்து அவனுக்குத் தெரியுமா என்று கேட்டபோது அவன், தனக்கு யாரும் அதை விளக்கிக்கூறவில்லையாகையால் தனக்குத் தெரியாது என்று கூற, பிலிப்பு இயேசுவைக் குறித்து வேதவசனங்கள் கூறுவதை விவரித்துச் சொன்னான். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள மந்திரி ஆயத்தமானபோது, பிலிப்பு தண்ணீரில் இறங்கி அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் கரையேறினவுடனே ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார்.

இங்கு, பிலிப்பென்பவன் ஆவியானவரால் நடத்தப்படுவதைக் காண்கிறோம். ஒரு ஆத்துமாவை இயேசுவுக்கு நேரே வழிநடத்தும்படியாக ஆவியானவர் என்ன கட்டளை கொடுத்தாரோ, அதன்படி செய்கிறதை நாம் காண்கிறோம். ஆத்தும இரட்சிப்பைக் குறித்து ஒரு ஆத்துமாவுக்காகிலும் கூறவேண்டும்; அவ்வாத்துமாவை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்தவேண்டுமென்ற வாஞ்சையினால் அவன் ஓடினான்.

பிரியமானவர்களே, வாஞ்சையில்லாமல் ஊழியஞ்செய்வது வீணும் வியர்த்தமுமாகும். முழுமனதோடு ஊழியஞ்செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**4. மாற்கு 10:17**

இவ்வேத பகுதியில், ஒரு மனிதன் **ஓடி**வருகிறதைக் குறித்து நாம் வாசிக்கிறோம் ஓடிவந்த அவன், இயேசுவுக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி தான் என்ன செய்யவேண்டும்

என்று அவரைக் கேட்டான். அவனுக்குள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வாஞ்சை இருந்தது. அவன் ஐசுவரியவனாயிருந்தும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படியாக இயேசுவிடம் ஓடிவந்தான். அப்பொழுது இயேசு, கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி கூறினார். அதற்கு அவன், தன் சிறுவயது முதல் அவற்றைக் கைக்கொண்டிருப்பதாகச் சொன்னான். இயேசு அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து, ‘‘உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; நீ போய் உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடு; அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றி வா” என்றார் (வச. 21). அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்த காரணத்தால், இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான் (வச. 22).

கிறிஸ்துவுக்குள் பிரியமான மன்னா வாசகர்களே, வாஞ்சையிருந்தும் அதை நிறைவேற்றும் மனத்திறனில்லாவிடில் என்ன பிரயோஜனம்? இயேசு அவன் குறையைச் சுட்டிக்காட்டினார். அவன் ஆஸ்தியையெல்லாம் விற்று, தரித்திரருக்குக் கொடுக்கச் சொன்னார். சிலுவையை எடுத்துக்கொண்டு, தம்மைப் பின்பற்றிவரச் சொன்னார். ஆனால் அவனோ மனமடிந்து, துக்கத்தோடே போய்விட்டான் என்று வாசிக்கிறோம். நித்திய ஜீவனை வாஞ்சித்தும் உலக ஆஸ்தியை இழக்க மனமற்றவனாய், துக்கத்தோடே இயேசுவின் சமுகத்திலிருந்து போய்விட்டான். இயேசுவிடம் வந்த ஒருவருக்கும் துக்கம் ஏற்பட்டதேயில்லை. ஆனால் அவரிடம் ஓடி வந்த அம்மனிதன் துக்கத்தோடு திரும்பிப்போனான்.

உலக ஆஸ்தி, ஆசாபாசங்கள், நவநாகரீகங்கள் —— இவை நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத் தடையாயிருப்பதை நாம் இங்கே காணமுடிகிறது. இடுக்கமான வாசல் வழியாகத்தான் நாம் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியும். இதை மனதில் கொண்டு, இயேசு தம் பரிசுத்த இரத்தத்தினால் சம்பாதித்த நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படியாக ஓடுவோமாக.

### 5. லூக்கா 19:4

இங்கு, சகேயு ஓடினான் என்று பார்க்கிறோம். எதற்காக ஓடினான்? அவனுக்குள் ஒரு வாஞ்சை இருந்தது. இயேசுவைக் காணவேண்டும் என்ற வாஞ்சை அது. சகேயுவும் ஒரு ஐசுவரியவானாயிருந்தான். அவன் ஆயக்காரருக்குத் தலைவன். இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப்பார்க்க வகைதேடினான் என்று 3ஆம் வசனம் கூறுகிறது. அவ்வாறெனில் அவன் இயேசுவைக் குறித்து அநேக காரியங்கள் கேள்விப்பட்டிருக்கக்கூடும். அவரைக்குறித்துக் கேள்விப்பட்டவை

அவனுக்குள் ஒரு ஆவலைத் தூண்டிவிட்டது. அவன் குள்ளனானபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைக் காணமுடியவில்லை. ஆகையால், அவர் போகும்வழியில் அவருக்கு முன்னாக **ஓடி,** அவரைப்பார்க்கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறினான். அவன் ஓட்டத்தில் அவனுக்கு ஒரு நன்மை கிட்டிற்று. அவன் இயேசுவைக் காணுமுன்பே, இயேசு அவனைக் கண்டார். மரத்தில் ஏறியிருந்த அவனை அண்ணாந்து பார்த்து, "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்" என்றார் (வச. 5). இது சகேயுவுக்கு எப்பேர்ப்பட்ட சிலாக்கியம்! அவன் ஒரு ஆயக்காரன். பணத்தைச் சம்பாதித்து வைத்திருந்தான். இயேசு அவன் வீட்டிற்குச் சென்றதினால், அவன் மனந்திரும்பி, அநியாயமாய் வாங்கின பணத்தை நாலத்தனையாகச் செலுத்துவதாகவும், தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுப்பதாகவும் இயேசுவிடம் கூறினான். உடனே இயேசு, ''இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது...'' என்று கூறி, "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்றார்.

உலக மக்களைப் போலல்லாது, இரட்சிக்கப்பட்டவர்களாகிய நமக்கு ஆவிக்குரிய ஓட்டம் உண்டு. விசுவாசிகளாகிய நாம், நம் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு ஆவிக்குரிய குறிக்கோள் அல்லது எதிர்பார்ப்புடன் ஓடவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். அதாவது, நாம் மனதில் ஒரு இலக்கை வைத்துக்கொண்டு, அதை அடையும்படியாக ஓடவேண்டும். உதாரணமாக, ஒரு பந்தயத்தில் ஓடுகிறவர்களெல்லாரும் ஒரு பரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற மனநிர்ணயத்துடன் ஓடுகின்றனரல்லவா? அவ்வாறே, விசுவாசிகளாகிய நாமும், நம் ஆவிக்குரிய வாழ்வின் முடிவில், நமக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் விசுவாச வாழ்க்கை வாழவேண்டும். மனக்கவலையையும், பாவபாரத்தையும் அகற்றிவிட்டு, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படியாக ஓடவேண்டும். ஆகையால்தான் எபிரெயர் நிருபத்தை ஆக்கியோன் இவ்வாறு எழுதுகிறார்: "...பாரமான யாவற்றையும் நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற **ஓட்டத்தில்** பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி. 12:1).

கர்த்தர் தாமே நமக்குக் கிருபையளிப்பாராக.

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

# THE RESURRECTION OF JESUS CHRIST

"He is not here, but is risen" (Luke 24:6): Those were the words spoken by the angels to the women who went to the sepulchre to anoint the body of Jesus with spices. But, they were told not to seek the living among the dead, and they informed the women that Jesus had risen from the dead.

The words of the angels lead to the question, "Then, where is He?" There is no direct answer to the question, for Jesus, being omnipresent, is everywhere. Soon after His reurrection Jesus showed Himself alive by being present in five places, so that His resurrection was proved true beyond doubt. Let us see where people saw Him alive after He was raised from the dead.

**1. At the sepulchre (cemetery) — John 20:11**

Mary Magdalene went to the sepulchre on the first day of the week when it was yet dark, and found the stone having been rolled away from the mouth of the tomb. She ran to Simon Peter and John the disciple Jesus loved, and told them that the body of the Lord had been taken away, and it was not known where it was laid. Obviously, Mary was not aware of Jesus' resurrection. The two disciples came to the sepulchre, but found only the linen used for wrapping the Lord's body, and returned home. But, Mary stood outside the sepulchre weeping. She stooped and looked into the tomb, and found two angels dressed in white sitting inside the tomb. They asked her why she was weeping, and she said that someone had taken away her Lord, and she did not know where they had laid His body. Still she believed Jesus to be dead. Then she turned and saw Jesus standing, but did not know it was Jesus. Jesus asked her why she was weeping, and whom she was seeking. Mistaking Jesus for the gardener, she told Him to let her know where he had laid Jesus so that she could take Him away. Then Jesus said "Mary", and Mary exclaimed, "Raboni" (Master)!

The fact that Mary saw Jesus alive proved His resurrection from the dead. It makes a vital difference between Christianity

and all other religions. Moreover, it gives us the **hope** of our resurrection and eternal life.

**2. On the mountain — Matthew 28:16,17**

On the first day of the week, Mary Magdalene and the other Mary went to the sepulchre. The angel of the Lord who came down from heaven told the women that Jesus had risen, and that they should tell the disciples that Jesus was going before them to Galilee, and there they would see Him. As the women were going to tell the disciples what the angel had told them, Jesus Himself met them, and greeted them. Then He told them to tell His disciples to go to Galilee where they would meet Him. Accordingly, they went to Galilee, and to the mountain appointed by Jesus. There they worshipped Him. Then Jesus said that all power was given to Him in heaven and on earth; and He gave them the great commission to teach all nations, baptize them in the name of the Father, the Son and the Holy Spirit, and told them to teach people to observe all the things He had commanded them. He assured them that He would be with them till the end of the age (vv. 18-20). The result of the meeting of the disciples with Jesus is **'strength'** to the weak disciples.

After the death of Jesus, the disciples were without a leader. Their meeting Jesus on the mountain gave them strength in their mind and heart. Moreover, Jesus transferred the power given to Him in heaven and earth to His disciples. Strengthening them, He told them to preach the gospel, and baptize people. He also assured them that He would be with them, confirming the word with signs and wonders.

**3. On the way — i) Matt. 28:9**

As Mary Magdalene and the other Mary were going to tell the disciples of Jesus the good news the angel had told them about Jesus being alive, Jesus Himself met them on the way, and greeted them. He told them not to be afraid, but go and tell His brethren (the disciples) to go to Galilee where they would see Him.

Here, we see Jesus meeting the two women on the way, that is, as they were going to tell the eleven disciples the good news of Jesus being alive. The women were beside themselves with **joy** as they had seen the resurrected Lord with their own eyes, and heard Him speak to them.

**ii) Luke 24:32**

This incident also happened on the way. Two of Jesus' disciples were on their way to Emmaus, a village about seven or eight miles from Jerusalem. The resurrected Lord joined them, but they could not recognize Him since they had known about His death and burial, but did not remember His words about His being raised from the dead on the third day. They were very sad, and Jesus asked them what they were talking about to each other that had made them sad. One of them named Cleopas asked Jesus if He was a stranger in Jerusalem so that He did not know what things had taken place in recent days. Jesus asked them what "things" they meant. Then they narrated the unforeseen and horrible things done to Jesus, and how their expectation that Jesus would redeem Israel had come to an end.

Jesus rebuked them for their lack of understanding Scriptures, and expounded to them the Scriputres beginning with Moses and all the prosphets down to the things concerning Himself. As they drew close to the village, they constrained Jesus to stay with them as it was getting late in the evening, and Jesus went with them. When he took the bread, broke it and gave it to them, their eyes were opened, and they knew it was Jesus. And He vanished.

Both incidents that took place on the way resulted in **joy** to those who met their resurrected Lord when they had not expected to see Him.

**4. In the house — John 20:24**

After the death and burial of Jesus, the disciples dreaded coming out of their homes for fear of being persecuted by the Jews. Therefore, they remained in their house which they had

locked from within. Jesus entered the house in His resurrected body, and pronounced, "Peace" to them. When the disciples thought that Jesus was still in the tomb, here He was right inside the house blessing them with peace. The presence of Jesus in your home also will give you **peace** — the peace that transcends all understanding. Whether you are in dread as the ten disciples were, or in doubt as Thomas was until Jesus came the second time just for the sake of the doubting disciple, Jesus blesses all with peace.

**5. On the seashore — John 21:1**

With all their hopes of ministering to people with Jesus their Master being shattered to pieces, the disciples who had forgotten the prophetic words of Jesus about His resurrection on the third day, decided to go back to their profession of fishing which they had given up because Jesus called them to follow Him. The first one to say, "I go fishing" was Simon Peter, and the rest of them who had gathered on the shore of the sea of Tiberias also joined him. They entered a ship, and tried to fish all through the night, but they caught nothing. Jesus was standing on the shore, but they did not recognize Him. Calling them lovingly as children, Jesus asked them if they had anything to eat. When they said, "Nothing", He told them to cast their net on the right side of the ship; when they did, they had a huge haul of 153 fish. On reaching the shore, they found fire of coals on which fish was being cooked, and some bread. Jesus provided them with breakfast.

The **love** of Jesus for His disciples was so great that He did not remember their deserting Him at the most crucial moment. He reassured them that He cared, refreshed them with His communion, and reaffirmed His love. Understanding their dejection that had caused their backsliding, He reinstated Peter in his calling.

Who can fathom the depth of Jesus 'love?

# உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்

''தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்" என்று யோவான் அப்போஸ்தலன் எழுதுகிறார் (I யோவான் 5:18). அவ்வாறே, மாயமற்ற விசுவாசத்தையுடையவன், உத்தம குமாரன் என்று புகழப்பட்ட இளம் போதகன் தீமோத்தேயுவுக்கு, "உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்தத்தின் மேன்மையையும், பரலோகத்தின் மகிமையினையும் மற்றெல்லா அப்போஸ்தலரிலும் கூடுதலாக அறிந்திருந்தபடியினால் இவ்விதம் எச்சரிக்கிறார். ஒருவன் தனது பரிசுத்த அழைப்பில் கடைசிவரை நிலைத்து நிற்கவேண்டுமானால் தன்னைத்தானே பரிசுத்தவானாகக் காத்துக்கொள்ள வேண்டும் என்ற சத்தியத்தை அப்போஸ்தலன் அறிவினாலும், அனுபவத்தினாலும் அறிந்திருந்தார். ஆனால், இன்று அநேக கர்த்தருடைய பிள்ளைகள், "கர்த்தர் என்னைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளுவார்" என்று எண்ணி, பரிசுத்தத்தின் முழு பொறுப்பையும் கர்த்தர் மேலேயே சாட்டிவிடுகின்றனர். இது தவறு. பாவத்தில் ஜீவித்த நம்மைத் தேடி வந்து, பாவத்திலிருந்து மீட்டு, பரிசுத்தமாக்கின தேவன், இப்பொழுது பரிசுத்தத்தை நமது கரங்களிலேயே கொடுத்து, "உன்னைப் பரிசுத்தவானாகக் காத்துக் கொள்" என்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் தொடர்ந்து கிரியை செய்துகொண்டு இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரின் துணையோடு பரிசுத்தத்தைக் காப்பதும், அதில் முன்னேறுவதும் நமது வேலை. மேலும், அது நம்மேல் விழுந்த கடமை. நமது பரிசுத்த ஜீவிய ஓட்டத்தை வெற்றியோடு முடிக்கவும், கர்த்தர் மேகங்கள்மேல் வருகையில் அவரைத் தைரியத்தோடு தரிசிக்கவும் அனுதினமும் நம்மை நாமே சுத்தவான்களாகக் காக்க வேண்டுவது அவசியம். எனவே நம்மை நாமே காத்துக்கொள்ள வேதத்தில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகளை மட்டும் சற்றுச் சிந்திப்போம்.

### 1. இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்

"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்" (நீதி. 4:23). நமது ஆவிக்குரிய ஜீவியம் பரிசுத்தமாகக் காக்கப்பட வேண்டுமானால் இருதயம் பரிசுத்தமாகக் காக்கப்பட வேண்டுவது மிக அவசியம். எரே. 17:9இல், "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது'' என்று கர்த்தர் கூறுவதனைக் காண்கிறோம். ஆம், பிரியமானவர்களே, இருதயம் நிலையற்றது. மாறக்கூடியது. ஒரு நாள் கர்த்தருடைய வழியையும்,

மற்றொரு நாள் உலக வழியையும் விரும்பக்கூடியது. தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன் என்று ஞானி கூறுகிறார். ஆகவே, கர்த்தருடைய வழிகளில் உற்சாகமாக நடக்க, இருதயத்தை ஆயத்தப்படுத்த வேண்டும் (யோபு 11:13).

ஜெபத்திலே தரித்திருந்து இருதயத்தின் வழிகளை ஆராய்ந்து அவைகளைச் சீர்ப்படுத்தவேண்டும். தேவ சமுகத்தில் இருதயத்தைப் பரிசோதிக்கிற வேளையில் குறிப்பிட்ட எந்தக் காரியத்தைக் குறித்தும் இருதயம் நம்மை நிந்திக்க விடக்கூடாது (யோபு 27:6). மனச்சாட்சியினால் தவறு என்று கண்டிக்கப்படும் காரியங்களை உடனுக்குடன் இருதயத்தை விட்டே அகற்றிவிடவேண்டும். யோசபாத் ராஜாவின் இருதயம் கர்த்தருடைய வழிகளில் உற்சாகம் கொண்டதினால் அவன் தேசத்தின் விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மேடைகளை உடைத்து, விக்கிரகங்களைச் சுட்டெரித்தும் போட்டான் என்று வேதத்தில் வாசிக்கின்றோம் ( II நாளா. 17:6). நமது இருதயத்தைச் சீராக்குவதும் இவ்வாறுதான். கர்த்தரால் கண்டிக்கப்படும் காரியங்களை ஈவு இரக்கம் காட்டாமல் நம்மைவிட்டு அகற்றிவிட வேண்டும்.

மேலும், "என் இருதயம் என் கண்களைப் பின்தொடர்ந்ததும் உண்டானால்" என்று யோபு சொல்லுகிறார். பொதுவாக, இருதயத்திற்குக் கண்களைத் தொடரும் இயல்பு உண்டு. நாம் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள விரும்புவோமேயாகில் கண்கள் காணும் பொருட்களையெல்லாம் இருதயம் தொடரவிடக்கூடாது. கர்த்தரின் ஒத்தாசையோடு இருதயத்தைக் காத்துக்கொள்ளத் தீர்மானிப்போமாக!

**2. புத்திமதிகளைக் காத்துக்கொள்ள வேண்டும்**

"புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே" (நீதி. 4:13).

"புத்திமதிகளை விரும்புகிறவன் அறிவை விரும்புகிறான்" என்று ஞானி கூறுகிறார் (நீதி. 12:1). புத்திமதிகளைக் கேட்பதும், அவைகளின்படியே நடப்பதும் நமது ஜீவிய பாதையில் உண்டாகும் தீமைகளுக்கும் கண்ணிகளுக்கும் நம்மைத் தப்புவிக்கும். "புத்திமதிகளைத் தள்ளிவிடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான்; கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்'' என்று நீதிமொழிகளில் வாசிக்கிறோம்.

நமது ஆவிக்குரிய ஜீவியத்தில் நம்மை நடத்தும்படிக்கும் நமக்குத் தேவையான ஆலோசனைகளைத் தரும்படிக்கும் கர்த்தர் சபையில் போதகர்களை, மேய்ப்பர்களை ஏற்படுத்தியிருக்கின்றார். "உங்களுக்கு

என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்" என்று எரேமியா 3:15இல் கர்த்தரே கூறுகின்றார். ஆம் பிரியமானவர்களே! நீங்கள் ஞானமுள்ள புத்திமதிகளைக் கேட்டு நடக்கவேண்டுமானால் முதலாவது கர்த்தரின் வழியில் உங்களை உண்மையாக நடத்தக்கூடிய மேய்ப்பன் அல்லது போதகனைக் கண்டுபிடிக்க வேண்டும். கர்த்தரை நோக்கி உண்மையான இருதயத்தோடு கேட்பீர்களானால் கர்த்தரே உங்களுக்குக் காட்டுவார். பின்னர் அவர்கள் கூறும் புத்திமதிகளைக் கேட்டு அதின்படி நடக்கவேண்டும். இன்று ஆவிக்குரிய உலகில் அநேகர் கர்த்தருடைய வழியைவிட்டு விலகிப்போவதின் காரணம், தேவன் தங்களுக்குக் காட்டிய மேய்ப்பனின் ஆலோசனைக்கு உட்பட்டு அடங்கியிராததுதான். "ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்று அப்போஸ்தலனாகிய பேதுரு வாலிபருக்கு எழுதுகிறார் ( I பேதுரு 5:6 ). இன்னும் தம் வசனத்தில், "இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்றும் எழுதுகிறார். நமது பரிசுத்த ஜீவிய ஓட்டத்தை நிறுத்த, பொதுவாக பிசாசு எடுக்கும் இரு உபாயங்கள் உண்டு. ஒன்று வியாதி, வறுமை, நஷ்டம், துன்பம் ஆகியவற்றை அனுப்பி, விசுவாச ஓட்டத்தை நிறுத்த முயற்சிப்பான். அல்லது, ஆவிக்குரிய ஜீவியத்தில் அதிக உற்சாகத்தைக் கொடுத்து, மூப்பரின் போதனை, ஜெபம், வேதவாசிப்பு ஆகியவற்றை அசட்டை செய்து, கர்த்தருக்காக ஊழியம் செய்யத் தூண்டுவான். கர்த்தரோடு ஐக்கியப்படுத்தும் ஜெபம், வேத வாசிப்பு, போதகரின் புத்திமதிகளைத் தள்ளும்போது, வெகு விரைவில் ஒரு விசுவாசி பின்வாங்க நேரிடுகிறது. இதனை வாசிக்கும் அருமையான வாலிப சகோதரனே! உமக்குத் தேவனால் அருளப்பட்ட ஓர் ஆவிக்குரிய மேய்ப்பன் உண்டா? நீர் அவரின் கைக்கு அடங்கியிருக்கிறீரா? அல்லது மேய்ப்பனும் அவருடைய புத்திமதியும் அற்று, ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்வாங்கும் நிலையில் இருக்கின்றீரா? சற்றுச் சிந்திப்பீராக! கர்த்தர் உமக்குக் கொடுத்திருக்கும் இப்புத்திமதியின்படியே நடக்கத் தீர்மானிப்பீராக. அப்பொழுது உமது ஆவிக்குரிய ஜீவியம் வளர்ந்து செழித்து, அநேகருக்குப் பிரயோஜனமுள்ள பாத்திரமாக மாறுவீர். ஏற்ற காலத்திலே கர்த்தர் உம்மை உயர்த்தும்படி இப்பொழுது அவரது பலத்த கைக்குள் அடங்கியிருப்பீராக.

### 3. வழிகளைக் காக்க வேண்டும்

"நீ எனக்கு முன்பாக நடந்தது போல, உன் குமாரரும் என் நியாயப்பிரமாணத்தில் நடக்கும்படி தங்கள் வழியைக் காப்பார்களேயாகில், இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் புருஷன் எனக்கு முன்பாக

உனக்கு இல்லாமற் போவதில்லை" (II நாளா. 6:16). இது கர்த்தர் தாவீதிற்கு அளித்ததோர் வாக்கு. தாவீதின் குமாரர் நியாயப்பிரமாணத்தின் வழியைக் காத்து நடப்பார்களானால் அவர்களை ஆசீர்வதிப்பதாக கர்த்தர் இங்குக் கூறுகிறார். பொதுவாக, மனுஷரின் இருதயத்திற்குச் செம்மையாகத் தோன்றுகிற வழியுண்டு. ஆனால் அதின் முடிவோ மரணம் அல்லது துன்பம்.

சங்கீதம் 84:5இல், "தங்கள் இருதயங்களிலே செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்'' என்று கூறப்பட்டுள்ளது. செவ்வையான வழி என்பது மற்ற மொழிபெயர்ப்புகளில் சீயோனுக்குப் போகும் வழி என்று கூறப்பட்டுள்ளது. சீயோன் என்பது தேவ சமுகத்தைக் காட்டுகிறது (சங். 84:7). அதாவது கர்த்தர் வாசம்பண்ணும் இடம். நமது ஜீவிய யாத்திரைக்குப்பின், அல்லது நமது உயிர் உடலை விட்டுப் பிரிந்தபின் நாம் தேவனோடுகூட நித்தியகாலமாக இருக்க வேண்டுமானால் இவ்வுலகத்தில் வாழும் நாட்களிலேயே நமது இருதயத்தில் தேவ சமுகத்திற்கு நம்மைக் கொண்டு செல்லக்கூடிய வழிகள் காணப்படவேண்டும் "மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள் என்று சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி, சீயோனுக்குப் போகிற வழி எது என்று கேட்டு விசாரிப்பார்கள்'' என்று எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார். ஆம்! பிரியமானவர்களே! உங்கள் ஜீவியத்திற்குப்பின் கர்த்தருடைய சமுகத்திற்கு உங்களைக் கொண்டுபோகிற வழி எது? என்று ஆராய்ந்து பாருங்கள். அந்த வழியிலே உங்கள் இருதயத்தையும் திருப்புங்கள்.

இன்னும் கர்த்தருடைய வழிகளில் நாம் நடக்கும்போது, பாதை தெரியாமல் தியங்கும் வேளைகளும் உண்டு. நாம் மெய்யாகவே கர்த்தருடைய வழியிலேயே நடக்க விருப்பம் கொண்டு, கர்த்தரோடு நெருங்கி ஜீவிப்போமானால் கர்த்தர் நிச்சயமாகவே நாம் செல்லவேண்டிய வழியைத் திட்டமாகக் காட்டுவார். "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே. இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா. 30:21). ஆகவே கர்த்தரின் கட்டளையின்படியும் தேவ சித்தத்தின்படியும் நமது வழிகளைக் காத்து நடக்கத் தீர்மானிப்போமாக!

### 4. உலகத்தால் கறைபடாதபடிக்குக் காத்துக்கொள்ள வேண்டும்

''உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" (யாக். 1:27).

உலகத்தால் கறைபடாதபடி காத்துக்கொள்ளவேண்டுமென்று

சொல்லும்போது உலகத்திலுள்ள பாவகறைகளை அல்ல. உலக அசுத்தமாகிய கறைகளையே குறிக்கிறது. பொதுவாக, ஒருவன் பாவத்தினால் கறைபடுவானேயாகில் உடனுக்குடன் மனச்சாட்சியினாலே குத்தப்படுகின்றான். ஆகவே, தனது பாவத்தை அறிக்கையிட்டு, கர்த்தரோடு ஐக்கியப்படுகின்றான். ஆனால் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளதின் பொருள், உலக அசுத்தங்களால் கறைபடாதபடிக்குக் காப்பதுதான். அசுத்தங்கள் என்றால் எழுத்தின்படியான அசுத்தங்கள் அல்ல. ஆவிக்குரிய ஜீவியத்திற்கு அசுத்தமானவைகள். அதாவது, ஆவிக்குரிய ஜீவிய வளர்ச்சிக்குத் தடையாயிருப்பது எதுவோ அதுவே அசுத்தம் என்று வேதத்தில் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய அசுத்தங்கள் பார்வைக்கு அசுத்தமாகத் தோன்றாவிட்டாலும் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கெடுக்கவும், பின்மாற்றத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் கூடியது.

ரோமர் 12:2இல், “நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும், பூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியதக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். பிரபஞ்சத்திற்கொத்த வேஷம் என்பது இவ்வுலக மக்களின் வேஷத்திற்கு ஒத்த வேஷத்தோடு தோற்றமளிப்பது. அதாவது அவர்களின் உடை நடைகளையே நாமும் பின்பற்றுவது. அத்தகைய வேஷம் நம்மைக் கறைபடுத்துமாதலால் இவ்வுலக வேஷம் தரிக்கக்கூடாது என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

மேலும் நீங்கள் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய சித்தம் இன்னதென்று பகுக்கதறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்கிறார். பிரியமானவர்களே! மனம் புதிதாக வேண்டுமானால், இருதயம் தேவ சாயலை அடைய வேண்டுமானால், தேவ சித்தம் இன்னதென்று அறிய வேண்டுமானால், இப்பிரபஞ்சத்தின் வேஷத்தைத் தரியாதிருக்க வேண்டும். இதுவே தேவ தீர்மானம். மனம் புதிதாகி, மறுரூபப்படுவதற்கும் வெளித்தோற்றத்திற்கும் சம்பந்தமில்லை என்று கூறுவது, ரோமர் 12:2இல் அப்போஸ்தலர் கூறியுள்ள உபதேசத்திற்கு மாறானது. ஆகவே பிரியமானவர்களே! உலக வேஷம் உங்களைக் கறைப்படுத்தி வல்லமையில் குறையச்செய்யும். ஆகையால் தேவ சமுகத்தில் உங்களைத் தாழ்த்தி, தேவனின் வெளிச்சத்தில் உங்களை ஆராய்ந்து, கறைகளாகக் காணப்படுபவைகளை உங்களை விட்டே விலக்கத் தீர்மானிப்பீர்களாக.

# நிருபனின் நிருபம் ✍

''மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" (வெளிப்படுத்தல் 1:18) என்று அறைகூவிச் சொல்லுகிற ஜெயவீரராம் இயேசுவின் நாமத்தில் "கிருபையின் மன்னா" வாசகர்கள் அனைவருக்கும் எனது உயிர்த்தெழுந்த இரட்சகரின் வாழ்த்துதலைக் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

நாம் ஒரு மரித்த தெய்வத்தை வணங்கவில்லை. மாறாக, "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (I கொரிந்தியர் 15:55) என்ற உறுதியான சவாலோடேகூட, இன்றும் உயிரோடே இருக்கிற ஜீவனுள்ள தேவாதி தேவனை வணங்கிச் சேவிக்கிறபடியால், இப்புதிய மாதத்திலும் நம்மை வெற்றியுடன் நடத்துவார் என்பதில் எவ்வளவேனும் சந்தேகமில்லை.

அரசுத் தேர்வு எழுதின, எழுதிக்கொண்டிருக்கிற நமது பிள்ளைகளுக்கு, தேவன்தாமே நல்ல தேர்வு முடிவைத் தந்து, அவர்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிள்ளைகளுக்காகவும், அவர்களது மேற்படிப்புக்கான தெய்வத்திட்டத்திற்காகவும் ஊக்கமாக ஜெபிப்போமாக. பெரிய எதிர்பார்ப்பின் ஆண்டாகிய இந்த 2018-ஆம் ஆண்டில் கர்த்தர் தாமே தமது தயவுள்ள சித்தத்தை நம் ஒவ்வொருவரது வாழ்விலும் தவறாமல் நிறைவேற்றுவாராக.

இக்கோடை விடுமுறை நாட்களைப் பயனுள்ள நாட்களாகப் பிரயோஜனப்படுத்திக் கொள்வோமாக. "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" (எபேசியர் 5:16) என்ற வசனத்திற்கேற்ப, கர்த்தருடைய சித்தம் இன்னது என்று உணர்ந்து, அதை நிறைவேற்றுவோமாக. உங்கள் பிள்ளைகளை அருகிலுள்ள திருச்சபைகளில் நடக்கும் விடுமுறை வேதாகமப்பள்ளிக்கு அனுப்பி, இயேசுவைப்பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பளியுங்கள். இன்றையத் தலைமுறை இயேசுவின் தலைமுறையாய் வளருவார்களாக.

கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ ஊழியர்கள், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு விரோதமாய்க் கிரியை செய்கிற மதவாத சக்திகளைத் தேவன்தாமே முற்றிலுமாய் அகற்றி, சுவிசேஷ ஊழியம் விடுதலையோடு செயல்பட ஊக்கமாய் ஜெபிப்போமாக.

பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குச் சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக.

சிலுவையின் நிழலில்
அன்பரின் ஊழியன்
**எஸ். ஆனந்த்**
**(S. Anand)**

# SMOOTH STONES FROM THE BROOK

## விசுவாசியின் அநுதின தீர்மான அறிக்கை

சங்கீதம் 101

- ★ இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன். வச. 1
- ★ உத்தமமான வழியிலே விவேகமாய் நடப்பேன். வச. 2
- ★ என் வீட்டிலே உத்தம இருதயத்தோடு நடந்து கொள்ளுவேன். வச. 2
- ★ தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன். வச. 3
- ★ வழிவிலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன். வச. 3
- ★ மாறுபாடான இருதயம் என்னைவிட்டு அகல வேண்டும். வச. 4
- ★ பொல்லாதவனை அறியமாட்டேன். வச. 4
- ★ கபடு செய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை. வச. 7
- ★ பொய் சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை. வச. 7
- ★ உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான். வச. 6


*If undelivered please return to*

**A.C.A. K.K. Nagar Ministry,**
**No. 50, Kannigapuram 1st Street, K.K. Nagar, Chennai - 600 078.**
**Phone : 044-2366 2677 / Cell : 9444141944**
**Email : sanandaca@gmail.com**


L.R. Graphics, Ph : 2489 5236